சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–2வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | மாவட்டம் | : | |
| க/பெ.பெயர் | : | வாசுதேவன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. தற்சமயம் நான் இடையன்காட்டுவலசு முகவரியில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்து அன்று வீரப்பசத்திரம் 282 சக்தி ரோடு ஈரோடு முகவரியில் வசித்து வந்தேன். அ.சா.1 என்னுடைய கணவர் ஆவார். எனக்கு கோமதி என்கிற மூத்த மகள் மற்றும் அருண்ராம் என்ற மகனும் குழந்தைகள் ஆவார்கள். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். கடந்த 17.06.2014 அன்று மதியம் சுமார் 2 மணி அளவில் எனது மகன் என்னிடம் நான் தூங்கபோகிறேன் எழுப்ப வேண்டாம் என்று கூறினார். பின்னிட்டு என் கணவர் அன்றைய தினம் அருண்ராமை சாப்பிட அழைப்பதற்காக சுமார் இரவு 11 மணி அளவில் அழைத்தனர் அவர் வரவில்லை எனவே நானும், என் கணவரும் சேர்ந்து என் மகனின் அறைக்கு சென்று அவரது கதவை தட்டியபோது திறக்கவில்லை.

2. மேலும் பலமுறை நானும், என் கணவரும் கதவை தட்டியபோது என் மகன் கதவை திறக்காததால் என் கணவர் பால்கணிவழியாக என் மகனின் அறையில் உள்ள ஜன்னல் திறந்து இருந்த நிலையில் பார்த்தபோது எனது மகன் அருண்ராம் தூக்கில் தொங்கி கொண்டு இருப்பதை பார்த்து என்னிடம் கூறினார். என் கணவர் அவருடைய சகோதரர் ஆன சண்முகசுந்தரத்திற்கு இரவு 11.15 மணி அளவில் அழைபேசி மூலம் மேற்படி சங்கதி கூறினார்.

3. மேலும் சண்முகசுந்தரம் தன்னுடைய மகனான சிவராமன், மற்றும் என் கணவனின் மைத்துனர் சிங்காரவேல் ஆகியோர் மூவரும் எனது வீட்டிற்கு வந்தார்கள். மேற்படி நானும், என் கணவர் மற்றும் மேற்கண்ட மூவரும் சேர்ந்து என் மகனின் அறைக்கு சென்ற பார்த்தபோது சிவராமன் தன்னுடைய கால்களால் எட்டி உதைத்து இரட்டை கதவுகள் கொண்ட தாழ் திறந்து கொண்டது.

4. மேலும் சிவராமன் கத்தியால் தூக்கில் தொங்கி கொண்டடிருந்த வேஷ்டியை அறுத்தும், சிங்காரவேல்,சண்முகசுந்தரம் ஆகியோர் உடலை தூக்கி பிடித்து கொண்டும் பிறகு அவரது உடலை மின் விசிறியில் இருந்து இறக்கினார்கள். எனதுமகனின் உயிரை காப்பாற்றுவதற்காக ஆம்புலன்ஸ் மூலமாக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு என்னுடைய மகன் இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதி செய்தார்கள்.

5. அதன்பிறகு என்னுடைய மகனை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள். நானும், என்னுடைய கணவர் மற்றும் என் உறவினர்கள் அனைவரும் வீட்டிற்கு திரும்பிவிட்டோம். மறுநாள் காலை 6 மணி அளவில் காவல் நிலைய ஆய்வாளர் சவகிடங்கில் அடையாளம் காட்டும்படி கூறினார் அதற்கு இறந்து போனவர் என் மகன் தான் என்று அடையாளம் காட்டினேன். மேற்படி போலீஸ்சார் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் என்னிடம் பதிவு செய்தார்கள். 28.06.2014 அன்று நானும், என் கணவரும் என் மகனின் அறைக்கு சென்று சுத்தம் செய்ய சென்ற போது அங்கு என் மகன் வைத்திருந்த ஒரு புத்தகத்தில் எழுதி வைத்த கடிதத்தை படித்த போது என் மகன் 3ம் எதிரியை காதலித்து அவர் என் மகனை ஏமாற்றி காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டார் என்பதை தெரிந்து கொண்டோன்.

6. மேலும் 1,2 எதிரிகள் மருத்துவர் சதாவித்திடம் அருண்ராமை பற்றி இழிவாகவும், கேவலமாகவும் பேசி மன உளைச்சல் ஏற்படுத்தி என் மகன் தன்னுடைய கடிதத்தில் எதிரிகள் மூவரும் தான் தற்கொலைக்கு தூண்டி விட்டார்கள். என்னுடைய மருமகன் சரவணன்வெங்கட்ராமண் உடன்பிறந்த சகோதரி 2ம் எதிரி ஆவார். 1ம் எதிரி 2ம் எதிரியின் கணவர் ஆவார். சதாசிவத்திடம் 3ம் எதிரியான மஞ்சு அழைபேசி மூலமாக அருண்ராமை 8 வருடங்களாக காதலித்து 3ம் எதிரியின் பெற்றோர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று கூறினார். மேலும் 3ம் எதிரி சதாசிவத்திடம் வேரு ஒரு நபரிடம் தனக்கு திருமணம் நடக்க போவதாக கூறினார்.

7. 2ம் எதிரியான பானுமதி சதாசிவத்திடம் 3ம் எதிரிக்கு திருமணம் நடக்க இருப்பதால் அருண்ராமை அழைபேசியில் 3ம் எதிரியிடம் பேச வேண்டாம் என்று கூறினார். 1ம் எதிரி சதாசிவத்திடம் அருண்ராமை ஒழுங்காக இருக்க சொல்லி அறிவுறுத்தினார் இல்லை என்றால் 1ம் எதிரி தனக்கும் ஈரோட்டில் ஆட்கள் இருப்பதாக கூறினார். சதாசிவம் அருண்ராமிடம் அழைபேசி மூலம் எதிரிகள் தரக்குறைவாக, இழிவாக பேசினார்கள் அதற்கு அருண்ராம் சதாசிவத்திடம் 3ம் எதிரியான மஞ்சுதான் அழைபேசி மூலம் தொடர்ந்துபேசி எனக்கு தொல்லை கொடுத்து வந்தார் மேலும் அருண்ராம் தன்னுடைய அழைபேசியில் உள்ள incoming, outgoing அழைப்புகளை பார்த்தால் 3ம் எதிரி அழைபேசி மூலம் தொடர்ந்து பேசி தொல்லை கொடுத்தார் என்று கூறினார். மேலும் என் மகன் தற்கொலை செய்து கொள்வதற்கு 4 நாட்களுக்கு முன்பு மேற்கண்ட சங்திகளை சதாசிவத்திடம் கூறினார்.

8. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் என் மகன் எழுதிய தற்கொலை கடிதம் தான் என்றால் சரிதான். போலீஸ்சார் 30.06.2014 அன்று என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அக்டோபர் மாதம் 2013ம் ஆண்டு நானும், என் கணவரும் திண்டுக்கல்லில் இருந்து காலிக்கட்டுக்கு பெண் கேட்பதற்காக கிழம்பி சென்றோம். மேலும் என் கணவர் 2ம் எதிரியான பானுமதியிடம் நல்ல விசயமாக பேச என் மனைவியுடன் வருகிறேன் என்று அழைபேசியில் கூறினார். அதற்கு 2ம் எதிரி சம்மதம் தெரிவித்தார். மேற்படி நானும், என் கணவரும் காலிக்கட்டு சென்று எதிரிகள் வீட்டிற்கு சென்ற போது அங்கு காலிங்பெல் அடித்த போது எதிரிகள் யாரும் வரவில்லை. மேலும் எதிரிகளின் வீட்டின் கதவை தட்டினோம் ஆனால் யாரும் வரவில்லை. எனவே என் கணவர் சிவராமகிருஷ்ணனுக்கு அழைபேசி மூலம் தொடர்ப்பு கொண்டார் ஆனால் அவர் அழைபேசியை எடுக்கவில்லை. அதன்பிறகு என் மகன் 6 மாதம் காலம் மனம் உடைந்து சென்னையிலிருந்தார்.

9. மேலும் என் மகனின் தற்கொலைக்கு முழுமுதல் காரணமான 3ம் எதிரி மஞ்சுவால் தான் என் மகன் உயிரை மாய்த்து கொண்டார். போலீஸ்சார் என்னை விசாரரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.